**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 24.01.2022–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : .01.2022 இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) 15–ஆவது நிதிக்குழு மான்யம் 2021–22–ஆம் ஆண்டிற்கான Tied grant பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டதற்கான விளம்பரக் கட்டணம் ரூ. 2625/– மாலை முரசு நாளிதழுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(4303/21/இ2)

**தீர்மானம் எண். 1208**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு தேவையான தளவாடப் பொருட்கள், பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் கொரோனா நோய் தடுப்பிற்கு தேவைப்படும் பொருட்கள் விநியோகம் செய்ய கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் 21.01.2022–ஆம் தேதியில் பெறப்பட்டது. அவற்றின் விவரம்.

| வ. எண். | தேவைப்படும் அளவு மற்றும் பொருள் | மீனாட்சி டிரேடர்ஸ், மதுரை | விநாயகா டிரேடர்ஸ், மதுரை |
|---|---|---|---|
| 1 | 9000 லிட்டர் கருப்பு பினாயில் | 75 each 675000.00 | 65 each 585000.00 |
| 2 | 1300 லிட்டர் கழிவறை சுத்தம் செய்வதற்கான ஆசிட் | 66 each 85800.00 | 50 each 65000.00 |
| 3 | 83 ஜோடிகள் காலனி (ஆண், பெண்) | 255 each 21165.00 | 225 each 18675.00 |
| 4 | 83 எண்ணிக்கை மழை கோட் | 970 each 80510.00 | 900 each 74700.00 |
| 5 | 83 எண்ணிக்கை ஒளிரும் சட்டை | 290 each 24070.00 | 250 each 20750.00 |
| 6 | 25 எண்ணிக்கை பிக்காஷ் | 390 each 9750.00 | 320 each 8000.00 |
| 7 | 1000 எண்ணிக்கை தென்னந்துடப்பம் | 50 each 50000.00 | 30 each 30000.00 |
| 8 | 250 எண்ணிக்கை மூங்கில் மரம் | 290 each 72500.00 | 260 each 65000.00 |
| 9 | 100 எண்ணிக்கை சாக்கடை மண் சுரண்டி | 375 each 37500.00 | 335 each 38400.00 |
| 10 | 100 எண்ணிக்கை – Shovel Hand Grip | 410 each 41000.00 | 384 each 38400.00 |
| 11 | 100 எண்ணிக்கை – Large fortach fork handle | 550 each 55000.00 | 490 each 49000.00 |
| 12 | 100 எண்ணிக்கை – Small foot with fork handle | 330 each 33000.00 | 300 each 30000.00 |
| 13 | 200 எண்ணிக்கை – அலுமினியக் கூடை | 400 each 80000.00 | 375 each 75000.00 |
| 14 | 200 எண்ணிக்கை குப்பை அகற்றும் கை சுரண்டி | 145 each 29000.00 | 115 each 23000.00 |

| | | | |
|---|---|---|---|
| 15 | 50 எண்ணிக்கை அரிவாள் | 220 each 11000.00 | 190 each 9500.00 |
| 16 | 192 லிட்டர் hand wash liquid | 195 each 37440.00 | 180 each 34560.00 |
| 17 | 1500 எண்ணிக்கை மருத்துவ பயன்படுத்தப் படும் அகற்ற பயன்படுத்தப்படும் மஞ்சப்பை | 33 each 49500.00 | 28 each 42000.00 |
| 18 | 2000 லிட்டர் லைசால் கிருமிநாசினி | 230 each 460000.00 | 200 each 4000.00 |
| 19 | 120 லிட்டர் Hand Sanitizer | 540 each 64800.00 | 500 each 60000.00 |
| 20 | 72000 எண்ணிக்கை மூன்றடுக்கு முகக்கவசம் | 10 each 432000.00 | 4 each 288000.00 |
| 21 | 144 டன் சுண்ணாம்பு | 12 each 1728.00 | 9 each 1296.00 |
| 22 | 20 டன் பிளிச்சிங் பவுடர் (34%) | 45 each 900.00 | 40 each 800.00 |
| 23 | 200 எண்ணிக்கை பாதுகாப்பு முக கண்ணாடி கவசம் | 29 each 5800.00 | 21 each 42000.00 |
| | **மொத்தம்** | **2357463.00** | **1956381.00** |

வ.எண். 2–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால் விநாயகா டிரேடர்ஸ், மதுரை என்ற நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க ஆணையாளர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள விநாயகா டிரேடர்ஸ், மதுரை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.
2) செலவினத்தை நகராட்சி பொது நிதி (அல்லது) திடக்கழிவு மேலாண்மை (அல்லது) பேரிடர் மேலாண்மை நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(4699/22/எச்1)

**தீர்மானம் எண். 1209**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(3) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் குப்பை அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் LCV ஆட்டோ (TATA ACE) TN 28 BW 9243 பழுதுகளை சரிசெய்ய TATA Authorized Service Station நாமக்கல், ராஜம் மோட்டார்ஸ் நிறுவனத்தில் மதிப்பிடு பெறப்பட்டுள்ளது. ரூ. 12219/– செலவாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பழுதுகள் சரி செய்ய ஆணையிட்டதையும் உத்தேச செலவினம் ரூ. 13000/–க்கும் தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பழுதுகளை சரிசெய்ததை தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2) உத்தேச செலவினம் ரூ. 13000/–ஐ நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(105/21/எச்1)

**தீர்மானம் எண். 1210**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(4) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண். 3559/2021/பி1 நாள் 21.01.2022–இல் திரு எம். ஸ்ரீதர், வடிகட்டி பராமரிப்பாளர், திருச்செங்கோடு நகராட்சி அவர்கள் பொருத்துநர் நிலை–2 பணியிடமும், வடிகட்டி பராமரிப்பாளர் பணியிடமும் ஒன்றுக்கொன்று

மாறுதல் செய்யும் பணி என்றும் தனக்கு தனது குடும்ப சூழ்நிலைக் காரணமாக ஏதேனும் ஒரு நகராட்சியில் காலியாக உள்ள குழாய் பொருத்துநர் நிலை–2 பணியிடத்திற்கு பணி மாறுதல் வழங்கவும் கோரியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்நகராட்சியில் காலியாக உள்ள குழாய் பொருத்துநர் நிலை–2 பணியிடத்திற்கு திரு எம். ஸ்ரீதர், திருச்செங்கோடு நகராட்சி அவர்களை ஈர்த்துக் கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** இந்நகராட்சியில் பொருத்துநர் நிலை–2 பணியிடம் ஒன்று காலியாக உள்ளதால் திரு எம். ஸ்ரீதர், திருச்செங்கோடு நகராட்சி அவர்களை ஈர்த்துக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(33/22/சி1)

**தீர்மானம் எண். 1211**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதார மலேரியாப் பிரிவிற்கு வளர்ச்சியடைந்த கொசுக்களை அழிக்க புகை மருந்து அடிக்கும் இயந்திரம் 2 விநியோகம் செய்ய கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம்.

| வ. எண். | தேவைப்படும் அளவு | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன் | ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ் |
|---|---|---|---|
| 1 | 2 | ரூ. 74368/– ஒன்றின் விலை | ரூ. 74860/– ஒன்றின் விலை |
| | | ரூ. 148736/– இரண்டின் விலை | ரூ. 149720/– இரண்டின் விலை |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால் ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், நாமக்கல் என்ற நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க ஆணையாளர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) தற்போது கூடுதலாக 2 எண்ணிக்கை புகை அடிக்கும் இயந்திரம் தேவைப்படுவதால், இந்த ஒப்பந்தப்புள்ளியில் வாங்கிக்கொள்ள அனுமதிக்கலாம்.

(4247/1/எச்1)

**தீர்மானம் எண். 1212**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(6) 15–ஆவது நிதிக்குழு மான்யத்தின் 2020–21–ஆம் ஆண்டுக்கான Tied Grant செலவின விவரங்களினை City Finance Portal-இல் பதிவேற்றம் செய்ய தெரிவித்த வழிமுறைகளின்படி குடிநீர் மற்றும் பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை பதிவேற்றம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மின் கட்டணம் ரூ. 4.49 இலட்சம் Untied Grant-இல் செலுத்தப்பட்டதை நீக்கி வார்டு எண். 6, கிருஷ்ணன் தெரு, வார்டு எண். 10, வி. நகர் ரோடு எண். 17–இல் உள்ள பொதுக்கழிப்பிடங்கள் பராமரிப்பு செய்தல் பணி மற்றும் வார்டு எண். 24, மாதா கோவில் தெரு, வார்டு எண். 25, காளியம்மன் கோவில் தெருவிலுள்ள பொதுக்கழிப்பிடங்கள் பராமரிப்பு செய்தல் பணி முறையே ரூ.

2.00 இலட்சம். ஆக மொத்தம் ரூ. 4.00 இலட்சம் பணியை Untied Grant-இல் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மின் கட்டணம் செலவினத்தை நீக்கி பொதுக்கழிப்பிடங்கள் பராமரிப்பு செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(4303/21/இ2)

**தீர்மானம் எண். 1213**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(7) இராசிபுரம் நகராட்சி நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் 2022–க்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள தமிழ்நாடு தேர்தல் ஆணையத்தால் காணொலி மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் 2022–க்கு செலவினம் மேற்கொள்ள உத்தேச செலவினம் தொகை ரூ. 62.00 இலட்சத்திற்கு (ரூபாய் அறுபத்திரண்டு லட்சம்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(4021/21/அ5)

**தீர்மானம் எண். 1214**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

( 8 ) இந்நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்தில் சுங்கம் வசூல் செய்யும் உரிமை 2021–2024–ஆம் ஆண்டிற்கு திரு ஆர். விநாயகமூர்த்தி, த/பெ. இராமலிங்கம், 5, வெங்கிடசாமி என்பவர் எடுத்துள்ளார். தற்போது மேற்படியார் தனது குடும்ப சூழ்நிலைக் காரணமாக குத்தகை உரிமையை திரு எஸ். கார்த்திகேயன், த/பெ. சுப்ரமணி என்பவருக்கு பெயர் மாற்றம் செய்ய ஆட்சேபணையின்மை கடிதத்தினை நோட்டரி வழக்கறிஞர் மூலம் எழுதிக் கொடுத்துள்ளார்.

பெயர் மாற்றம் செய்யக் கோரிய திரு ஆர். விநாயகமூர்த்தி என்பவர் குத்தகைத் தொகை ரூ. 200001/– நாளது வரை செலுத்தாமலுள்ளார். மேலும், புதியதாக பெயர் மாற்றம் செய்யக் கோரும் திரு எஸ். கார்த்திகேயன் என்பவர் 12 மாத குத்தகைத் தொகை ரூ. 840000/– மற்றும் பெயர் மாற்றக் கட்டணம் ரூ. 5000/– செலுத்த வேண்டும். இதுவிவரம் ஆணையாளர் அவர்களின் பார்வைக்கும் ஆணைக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது. மேற்படியார்கள் இருவரும் தனக்குரிய வாடகைத் தொகை, முன்பணத் தொகை மற்றும் பெயர் மாற்றக் கட்டணம் செலுத்திய பின் பெயர் மாற்றம் செய்யலாம் என்ற நிபந்தனையின்பேரில் பெயர் மாற்றம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :** திரு ஆர். விநாயகமூர்த்தி என்பவர் முழு வாடகை செலுத்திய பிறகும், பெயர் மாற்றம் திரு எஸ். கார்த்திகேயன் என்பவர் உரிய முன்பண கட்டணங்கள் முழுவதும் செலுத்திய பிறகும் பெயர் மாற்றம் செய்யலாம்.

(4523/20/அ2)

**தீர்மானம் எண். 1215**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(9) இந்நகராட்சிக்குச் சொந்தமான அசைவ உணவு விடுதியினை திருமதி கவிதா என்பவர் ஏலம் எடுத்து நடத்தி வந்தார். தற்போது குடும்ப சூழ்நிலைக் காரணமாக மேற்படி கடையினை திரு எஸ். பழனிசாமி, த/பெ. சுப்ரமணி என்பவருக்கு பெயர் மாற்றம் செய்ய ஆட்சேபணையின்மை கடிதத்தினை நோட்டரி வழக்கறிஞர் மூலம் எழுதிக் கொடுத்துள்ளார்.

பெயர் மாற்றம் செய்யக் கோரிய திருமதி கவிதா என்பவர் கடை வாடகை பாக்கித் தொகை ரூ. 390816/– நாளது வரை செலுத்தாமலுள்ளார். மேலும், புதியதாக பெயர் மாற்றம் செய்யக் கோரும் திரு எஸ். பழனிசாமி என்பவர் 12 மாத வாடகைத் தொகை ரூ. 293112/– மற்றும் பெயர் மாற்றக் கட்டணம் ரூ. 2500/– செலுத்த வேண்டும். மேற்படியார்கள் இருவரும் தனக்குரிய வாடகைத் தொகை, முன்பணத் தொகை மற்றும் பெயர் மாற்றக் கட்டணம் செலுத்திய பின் பெயர் மாற்றம் செய்யலாம் என்ற நிபந்தனையின்பேரில் பெயர் மாற்றம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :** திருமதி கவிதா என்பவர் முழு வாடகை செலுத்திய பிறகும், பெயர் மாற்றம் எஸ். பழனிசாமி என்பவர் உரிய முன்பண கட்டணங்கள் முழுவதும் செலுத்திய பிறகும் பெயர் மாற்றம் செய்யலாம்.

(270/22/அ2)

**தீர்மானம் எண். 1216**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(10) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான ஆண்டுக் குத்தகை இனங்களுக்கு 2021–2022–ஆம் ஆண்டிற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு ஆறாம் அழைப்பு விளம்பரம் செய்தமைக்கு Kal Publications (P) Ltd., எனும் நிறுவனத்திலிருந்து தொகை ரூ. 14112/–க்கான பட்டியல் வரப்பெற்றுள்ளது. இத்தொகை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(4523/20/அ2)

**தீர்மானம் எண். 1217**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(11) நகராட்சிக்குட்பட்ட தினசரி மார்கெட் கடை எண். 32–ஐ திரு எ. சேகர் என்பவர் குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்தார். 31.01.2022 வரை வாடகை பாக்கியில்லாமல் நிலுவையின்றி செலுத்தி கடையை தனக்கு வேண்டாமென நகராட்சி வசம் 31.01.2022 அன்று ஒப்படைத்து விடுவதாக விண்ணப்பம் அளித்துள்ளார். எனவே, கடை எண். 32–க்கு கேட்பு நிறுத்தம் செய்யவும், பொது ஏல நடவடிக்கை தொடரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) நகராட்சிப் பொறியாளர் மூலம் கடையின் கட்டிட உறுதித் தன்மையை ஆய்வு செய்து பொது ஏலம் கேட்க அனுமதிக்கலாம்.

(86/22/அ2)

**தீர்மானம் எண். 1218**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

( 12 ) இந்நகராட்சிப் பணியாளர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் சேமநலநதி சந்தாத் தொகைக்கு 2020–2021–ஆம் ஆண்டு வட்டி கணக்கீடு செய்து வழங்கும் பணிக்கு 02.01.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1) | திரு கே. பிரபாகரன், Sanjay Solutions, குமாரபாளையம். | ரூ. 50000/– |
| 2) | திரு வி. ராமன், ராம் சொல்யூஷன்ஸ், திருவான்மியூர், சென்னை | ரூ. 51000/– |
| 3) | O Zone Technologies, வேக வியூரோடு, சென்னை | ரூ. 52500/– |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள திரு கே. பிரபாகரன், Sanjay Solutions, குமாரபாளையம் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(4900/21/பி2)

**தீர்மானம் எண். 1219**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

( 13 ) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் வணிக வளாக கடை எண்கள். 15, 21, 34 மற்றும் 35–க்கு வைப்புத் தொகை திரு கே. புகழேந்தி செலுத்தியுள்ளார். குத்தகைக்கு திரு கே. புகழேந்தி மாத வாடகைக்கு எடுத்து வந்த நிலையில் 11.06.2021–ஆம் தேதி இறந்துவிட்டார். அவர் செலுத்தியிருந்த வைப்புத் தொகை ரூ. 136412/– அவரது வாரிசாகிய திருமதி பி. சுமதி, (லேட்) கே. புகழேந்தி–க்கு வழங்க கோரியுள்ளார். பழைய பேருந்து நிலைய கடை எண்கள். 15, 21, 34 மற்றும் 35 ஆகிய கடைகளின் வைப்புத் தொகை 1994–1995, 2019–20 காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளதால் அவரது வாரிசாகிய திருமதி பி. சுமதி, (லேட்) கே. புகழேந்தி–க்கு வைப்புத் தொகை ரூ. 136412/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ஆண்டு வாரியாக கடைகளின் வைப்புத் தொகை விவரங்கள் வருமாறு.**

| ஆண்டு | பெயர் / கடை எண். | ப.எண். | வ.எண். | தொகை |
|---|---|---|---|---|
| 2002–03 | திரு கே. புகழேந்தி, க.எண். 15 | 30 | 105 | ரூ. 4690/– |
| 2003–04 | திரு கே. புகழேந்தி, க.எண். 15 | 36 | 112 | ரூ. 1920/– |
| 2005–06 | திரு கே. புகழேந்தி, க.எண். 15 | 46 | 97 | ரூ. 4060/– |
| 2009–10 | திரு கே. புகழேந்தி, க.எண். 15 | 57 | 23 | ரூ. 1248/– |
| 2009–10 | திரு கே. புகழேந்தி, க.எண். 15 | 60 | 92 | ரூ. 3866/– |
| 2012–13 | திரு கே. புகழேந்தி, க.எண். 15 | 67 | 22 | ரூ. 3096/– |
| 2015–16 | திரு கே. புகழேந்தி, க.எண். 15 | 75 | 7 | ரூ. 1824/– |

| ஆண்டு | பெயர் / கடை எண். | ப.எண். | வ.எண். | தொகை |
|---|---|---|---|---|
| 2003–04 | திரு கே. புகழேந்தி, க.எண். 21 | 35 | 405 | ரூ. 747/– |
| 2005–06 | திரு கே. புகழேந்தி, க.எண். 21 | 46 | 98 | ரூ. 4466/– |
| 2009–10 | திரு கே. புகழேந்தி, க.எண். 21 | 57 | 22 | ரூ. 1380/– |
| 2012–13 | திரு கே. புகழேந்தி, க.எண். 21 | 68 | 23 | ரூ. 5484/– |

| | | | | |
|---|---|---|---|---|
| 2015–16 | திரு கே. புகழேந்தி, க.எண். 21 | 75 | 8 | ரூ. 1656/– |
| 2019–20 | திரு கே. புகழேந்தி, க.எண். 21 | 87 | 1 | ரூ. 10800/– |

| ஆண்டு | பெயர் / கடை எண். | ப.எண். | வ.எண். | தொகை |
|---|---|---|---|---|
| 1994–95 | திரு கே. புகழேந்தி, க.எண். 34 | 11 | 115 | ரூ. 865/– |
| 1999–2000 | திரு கே. புகழேந்தி, க.எண். 34 | 21 | 21 | ரூ. 1754/– |
| 2000–01 | திரு கே. புகழேந்தி, க.எண். 34 | 23 | 36 | ரூ. 165/– |
| 2003–04 | திரு கே. புகழேந்தி, க.எண். 34 | 35 | 106 | ரூ. 1458/– |
| 2005–06 | திரு கே. புகழேந்தி, க.எண். 34 | 46 | 99 | ரூ. 8729/– |
| 2009–10 | திரு கே. புகழேந்தி, க.எண். 34 | 56 | 21 | ரூ. 2693/– |
| 2012–13 | திரு கே. புகழேந்தி, க.எண். 34 | 67 | 21 | ரூ. 1584/– |
| 2015–16 | திரு கே. புகழேந்தி, க.எண். 34 | 75 | 5 | ரூ. 6301/– |
| 2019–20 | திரு கே. புகழேந்தி, க.எண். 34 | 87 | 2 | ரூ. 10800/– |

| ஆண்டு | பெயர் / கடை எண். | ப.எண். | வ.எண். | தொகை |
|---|---|---|---|---|
| 1999–2000 | திரு கே. புகழேந்தி, க.எண். 35 | 21 | 3 | ரூ. 18223/– |
| 2003–2004 | திரு கே. புகழேந்தி, க.எண். 35 | 35 | 107 | ரூ. 2592/– |
| 2005–2006 | திரு கே. புகழேந்தி, க.எண். 35 | 46 | 100 | ரூ. 15442/– |
| 2009–2010 | திரு கே. புகழேந்தி, க.எண். 35 | 60 | 88 | ரூ. 4765/– |
| 2012–2013 | திரு கே. புகழேந்தி, க.எண். 35 | 67 | 20 | ரூ. 1440/– |
| 2015–2016 | திரு கே. புகழேந்தி, க.எண். 35 | 75 | 6 | ரூ. 3564/– |
| 2019–2020 | திரு கே. புகழேந்தி, க.எண். 35 | 87 | 3 | ரூ. 10800/– |
| | மொத்தம் | | | 136412/– |

**அலுவலகக் குறிப்பு :** திருமதி பி. சுமதி, க/பெ. (லேட்) கே. புகழேந்தி அவர்களுக்கு காலங்கடந்த வைப்புத் தொகையில் உள்ள தொகையை திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(248/2022/பி2)

**தீர்மானம் எண். 1220**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**(14)** இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 27, அமைச்சர் கோவிந்தசாமி தெருவில் அமைந்துள்ள பொன் வரதராஜ பெருமாள் கோவிலில் இராஜகோபுரம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இக்கோபுரம் கட்டும் இடத்தில் குடிநீர் பகிர்மான குழாய் அமைந்துள்ளது. **110** mm PVC பகிர்மான குழாய் சுமார் **80** மீட்டர் நீளத்திற்கு மாற்றி அமைக்கவும் அதனுடன் செல்லும் ஆழ்துளை மின் மோட்டார் பைப் லைன் மாற்றியமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. **1,00,000/–** குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிக் கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
இ) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(291/22/இ2)

**தீர்மானம் எண். 1221**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

( 15 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 2, போலீஸ் லைன் தெரு, பொது சுகாதார வளாகத்தில் அமைந்துள்ள ஆழ்துளைக் கிணற்றின் நீர் முழ்கி மின்மோட்டார் பழுதடைந்துள்ளது. இப்பழுதினை சரி செய்ய ஆகும் செலவினம் ரூ. 70,000/– மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிக் கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
இ) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(4421/21/இ2)

**தீர்மானம் எண். 1222**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

( 16 ) இராசிபுரம் நகராட்சி, வார்டு–டி, பிளாக்–10, நகரளவை எண். 14/1, 2, 3, 10, 11, 12, 15, 16, 17 மற்றும் 18–இல் 1.7125 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு அனுமதி கோரி மனுதாரர் (1) திரு T. தங்கராஜ் (2) திரு T. உதயசங்கர் சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண். 1200/2020 நா.மா., நாள் 17.12.2021–இல் சாலைகளை உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்தும் மற்றும் பொது ஒதுக்கீடு சாலை அமைப்பு வரைபடத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

மேற்படி கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு அடிப்படை வசதிகளான தார்சாலை வசதிகள், குடிநீர் குழாய் வசதிகள், சாக்கடை வசதிகள், மின்கம்பம் வசதிகள் மற்றும் தெருவிளக்கு அமைக்கப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பொது உபயோகம் 300 ச.அடி. சாலைகள் 22283.875 சதுரடியும் தானசாசன ஆவண எண். 5728/2021 நாள் 03.11.2021–இன் மூலமாக இராசிபுரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் தானபத்திரம் மூலமாக பதிவு செய்து ஒப்படைத்துள்ளார். எனவே, மேற்படி மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது உபயோக ஒதுக்கீட்டினை ஏற்பது குறித்து மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது உபயோக ஒதுக்கீட்டினை ஏற்றமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(67/22/எப்1)

**தீர்மானம் எண். 1223**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

( 17 ) மனுதாரர்கள் (1) திரு T. தங்கராஜ் (2) திரு T. உதயசங்கர், இராசிபுரம் நகராட்சி, வார்டு–டி, பிளாக் எண். 10, நகர புல எண். 14/1, 2, 3, 10, 11, 12, 15, 16, 17 மற்றும் 18–இல் 1.7125 ஏக்கர் பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் கோரி விண்ணப்பித்துள்ள பிரேரணை நகர் ஊரமைப்புத்

துறை, உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. உதவி இயக்குநரால் பரிசீலனை செய்யப்பட்டு அவர்களது கடிதம் ந.க.எண். 1200/2020 நா.மா., நாள் 17.12.2021–இல் பொது ஒதுக்கீடு மற்றும் சாலைகளை ஒப்படைக்க தெரிவித்து சாலை அமைப்பு வரைபடத்துடன் அனுப்பி வைக்கப்பட்டதன் அடிப்படையில் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு அடிப்படை வசதிகளான தார்சாலை வசதிகள், குடிநீர் பகிர்மான குழாய் வசதிகள், சாக்கடை வசதிகள், மின்கம்பம் அமைக்கப்பட்டும் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளரால் 21.01.2022 அன்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பொது உபயோகம் பரப்பளவு 300 சதுரடியும், சாலைகள் 22283.875 சதுரடியும் தானசாசன ஆவண எண். 5728/2021 நாள் 03.11.2021 மற்றும் 5040/2021 நாள் 01.10.2021–இல் இராசிபுரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் தானமாக பத்திரம் பதிவு செய்து ஒப்படைத்துள்ளார். மேற்படி மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது உபயோக ஒதுக்கீட்டினை ஏற்பது குறித்து நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண். 1200/2020/நா.மா. நாள் 17.12.2021 தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மனைப்பிரிவு ம.வ./ந.ஊ(நாமா) எண். 193/2021 என எண்ணிட்டு சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளின் பேரில் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண். 1200/2020/நா.மா. நாள் 17.12.2021–இல் மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் அனுமதி வழங்கப்பட்ட நிபந்தனைகளின்பேரில் மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(67/22/எப்1)

**தீர்மானம் எண். 1224**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

( 18 ) 15–ஆவது நிதிக்குழு மான்யத்திட்டம் 2021–22–இன் Tied grant–இல் புதியதாக 2 எச்பி. மற்றும் 5 எச்பி மோட்டார், பேனல் போர்டு மற்றும் கேபிள் வாங்கி பொருத்துதல் பணிக்கு ரூ. 8.15 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 05.01.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு.

1) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் – மதிப்பீட்டினைவிட 0.13% குறைவு.
2) திருமதி சாகிதா, க/பெ. ரிஜ்வான், ஒப்பந்ததாரர், இராசிபுரம் – மதிப்பீட்டினைவிட 2.40% அதிகம்.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.13%) அளித்துள்ள திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர் அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணிக்கான செலவினத்தை 15–ஆவது நிதிக்குழு 2021–22 திட்டத்தின்கீழ் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

(4303/21/இ2)

**தீர்மானம் எண். 1225**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**(19)** இராசிபுரம் நகராட்சி குடிநீர் பிரிவில் பொருத்துநர் குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புகள் நிகழ்நிலை பதிவேற்றம் மேற்க்கொள்ளவும் (online entry) ஆணையாளர் அறையில் ஆணையாளர் நிகழ்நிலைப் பணிகள் மற்றும் ஆய்வுக் கூட்டங்களில் கலந்து கொள்ளவும் இரண்டு கணினிகள் தேவைப்படுகின்றன. அதன்படி core 15, 10th Gen 8GB Ram, 256 GB SSD Win-10 கணினி பொருத்துநர் பிரிவிற்கு ஒன்றும், ஆணையாளர் அறைக்கு Lenova all in one core 15, 10th Gen, 8GB RAM, 1 TB HOP, Wifi, Webcam, Speeder, Win-10 கணினி ஆணையாளர் அறைக்கும், அரசு தரப்படுத்தப்பட்ட (Gem) விலை விகிதத்தில் வாங்க ஆகும் செலவினம் ரூ. **118000/-** மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

கணினிகள் வாங்கும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) ரூ. **118000/-** மதிப்பீட்டில் அரசு தரப்படுத்தப்பட்ட (Gen) விலை விகிதத்தில் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(4881/21/இ1)**

**தீர்மானம் எண். 1226**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**(20)** இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான பொறியியல் பிரிவில் இயங்கி வரும் TN 28 BZ 9021 மற்றும் TN **28** AT **4555** ஆகிய வாகனங்களின் உபயோகமற்ற டயர்கள் **10** எண்ணிக்கையை பொது ஏலத்தின் மூலம் கழிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**(195/22/இ2)**

**தீர்மானம் எண். 1227**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**(21)** இராசிபுரம் நகராட்சி வார்டு எண். **20**, இராம் நகர் பகுதியில் குடிநீர் பகிர்மான குழாயினை மாற்றி அமைத்தல் பணி ரூ. **3.20** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள **20.01.2022** அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு.

**1)** திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர், **27**, வி. நகர் ரோடு எண். **17**,
இராசிபுரம் – மதிப்பீட்டினைவிட **0.13**% குறைவு.
2) திருமதி சாகிதா, க/பெ. ரிஜ்வான், ஒப்பந்ததாரர், **70**எ, வி. நகர் ரோடு எண். **17**
இராசிபுரம் – மதிப்பீட்டினைவிட **2.49** % அதிகம்.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு என். செல்லப்பன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு என். செல்லப்பன் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(4868/21/இ2)

**தீர்மானம் எண். 1228**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(22) 15–ஆவது நிதிக்குழு மான்யம் 2021–22–இன்கீழ் Tied grant–இல் நெகிழி துண்டாக்கி இயந்திரம் (Plastic schreddee) பெயிலிங் இயந்திரம் (Bailing Machine) சல்லடை இயந்திரம் (Sieving Machine) மற்றும் எடை பார்க்கும் இயந்திரம் (Weighing Machine) விநியோகம் செய்து பொருத்துதல் பணி ரூ. 8.85 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 05.01.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு.

1) ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், காமராஜ் நகர்,
நாமக்கல் – மதிப்பீட்டைவிட 0.05% குறைவு.

2) ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், காளப்பநாயக்கன்பட்டி,
நாமக்கல் – மதிப்பீட்டைவிட 1.91 % அதிகம்.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** மதிப்பீட்டைவிட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(4303/21/இ2)

**தீர்மானம் எண். 1229**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(23) இந்நகராட்சிக்கு 15–ஆவது நிதிக்குழு மான்ய நிதி 2021–22– Tied Grant இன்கீழ் வ.உ.சி. நகர் மேல்நிலைத் தொட்டியில் Horizontal split centrifucal pump விநியோகம் செய்து பொருத்துதல் பணிகள் மேற்கொள்ள ரூ. 35.00 இலட்சம் மதிப்பீட்டுப் பணிக்கு பணிகள் இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க. எண். 31114/2021/அம்ரூட் 2 நாள் 06.12.2021–இல் அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, பணி மேற்கொள்ள 05.01.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு :

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் விலாசம் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட | |
|---|---|---|---|---|
| | | | குறைவு | அதிகம் |
| 1 | M/s Alchem Industries,<br>32ஏ, ஊட்டி ரோடு, மேட்டுப்பாளையம், கோவை. | ரூ. 35.00 இலட்சம் | – | 4.92% |
| 2 | M/s. Sree Power Engineers,<br>109, துரைசாமி நாயுடு லே அவுட், பீளமேடு, கோவை | | – | 9.80% |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1–இல் உள்ள Alchem Industries, வ.எண்.2–இல் உள்ள Sree Power Engineers ஒப்பந்ததாரரைவிட குறைவாக அளித்துள்ளார். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டைவிட அதிகமாக இருப்பதாலும், பணி மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளதாலும் Alchem Industries, ஒப்பந்ததாரரிடம் விலைப்புள்ளி குறைத்து தர கடிதம் மூலம் கோரப்பட்டது. மேற்படி பணிக்கு மூலப்பொருட்கள் மற்றும் வேலையாட்கள் கூலி மற்றும் வண்டி வாடகை விலை உயர்வு காரணமாக ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள அனைத்து பணிகளுக்கும் 4.92% கூடுதலான விலை விகிதத்தில் இப்பணிகளை செய்து வழங்க ஒப்புக்கொள்கிறேன் என தெரிவித்து Alchem Industries, ஒப்பந்ததாரர் 10.01.2022 அன்று கடிதம் வழங்கியுள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பாக இருந்தாலும், பொறியாளர் கையேடு பக்கம் எண். 9–இல் பிரிவு 2.7.2.–இல் 5% வரை கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட திட்டப் பணியை விரைந்து முடிக்க வேண்டிய அவசியம் கருதி வ.எண்.1-இல் உள்ள ஒப்பந்ததாரரான Alchem Industries, மதிப்பீட்டை விட 4.92% கூடுதலான விலை விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பாக இருந்தாலும் திட்டப் பணியை விரைந்து முடிக்க வேண்டிய அவசியம் கருதி Alchem Industries, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைவிட 4.92% கூடுதலாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(4303/2021/இ2)**

**தீர்மானம் எண். 1230**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

( 24 ) இந்நகராட்சிக்கு 15–ஆவது நிதிக்குழு மான்ய நிதி 2021–22– Tied Grant இன்கீழ் தட்டான்குட்டை உரக்கிடங்கில் நுண்ணுயிர் உர மையத்தில் கூடுதல் பணிகள் மேற்க்கொள்ள ரூ. 20.00 இலட்சம் மதிப்பீட்டுப் பணிக்கு பணிகள் இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 31114/2021/அம்ரூட் 2 நாள் 06.12.2021–இல் அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, பணி மேற்கொள்ள 05.01.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு :

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் விலாசம் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட | |
|---|---|---|---|---|
| | | | குறைவு | அதிகம் |
| 1 | திரு.கே.ஜி. சீனிவாசன், 151ஏ–1ஏ,எம்.ஜி.ஆர். நகர், வீசாணம், நாமக்கல். | ரூ. 20.00 இலட்சம் | – | 4.98% |
| 2 | M/s P and B Enterprises, ஜே.ஜே.நகர், நாமக்கல் | | – | 6.21% |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண். 1–இல் உள்ள திரு.கே.ஜி. சீனிவாசன், வ.எண்.2–இல் உள்ள P and B Enterprises ஒப்பந்ததாரரைவிட குறைவாக அளித்துள்ளார். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டைவிட அதிகமாக இருப்பதாலும், பணி மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளதாலும் திரு.கே.ஜி. சீனிவாசன், ஒப்பந்ததாரரிடம் விலைப்புள்ளி குறைத்துதர கடிதம் மூலம் கோரப்பட்டது. மேற்படி பணிக்கு மூலப்பொருட்கள் மற்றும் வேலையாட்கள் கூலி மற்றும் வண்டி வாடகை விலை உயர்வு காரணமாக ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள அனைத்துப் பணிகளுக்கும் 4.98% கூடுதலான விலை விகிதத்தில் இப்பணிகளை

செய்து வழங்க ஒப்புக்கொள்கிறேன் என தெரிவித்து திரு.கே.ஜி. சீனிவாசன், ஒப்பந்ததாரர் 10.01.2022 அன்று கடிதம் வழங்கியுள்ளார்.

மேற்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பாக இருந்தாலும், பொறியாளர் கையேடு பக்கம் எண். 9–இல் பிரிவு 2.7.2.–இல் 5% வரை கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட திட்டப் பணியை விரைந்து முடிக்க வேண்டிய அவசியம் கருதி வ.எண்.1-இல் உள்ள ஒப்பந்ததாரரான திரு.கே.ஜி. சீனிவாசன், மதிப்பீட்டை விட 4.98% கூடுதலான விலை விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பாக இருந்தாலும் திட்டப் பணியை விரைந்து முடிக்க வேண்டிய அவசியம் கருதி திரு.கே.ஜி. சீனிவாசன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைவிட 4.98% கூடுதலாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(4303/21/இ2)

**தீர்மானம் எண். 1231**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(25) 15–ஆவது நிதிக்குழு மான்யம் 2021–22–இன்கீழ் Tied grant–இல் குப்பைகளை துண்டாக்கி அறைக்கும் இயந்திரம் பொருத்துதல் பணி ரூ. 4.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 05.01.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு.

1) ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், காமராஜ் நகர்,
நாமக்கல் – மதிப்பீட்டைவிட 0.08% குறைவு.
2) ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், காளப்பநாயக்கன்பட்டி,
நாமக்கல் – மதிப்பீட்டைவிட 0.56 % அதிகம்.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** மதிப்பீட்டினைவிட குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(4303/21/இ2)

**தீர்மானம் எண். 1232**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– ர. அசோக்குமார்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.